# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண்.59/2024

வாதி தரப்பு 3 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கல்யாணி | வா.சா.–3 | |
| க/பெ. | | | |
| கிராமம் | | தொழில் | இளநிலை உதவியாளர் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | |

---

முதல் விசாரணை 20-07-2026.

நான் விருதுநகர் இணை சார்பதிவாளர் எண்.2 அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். விருதுநகர் இணை சார்பதிவாளர் எண்.2 அவர்களுக்கு வரப்பெற்ற அழைப்பாணையின்பேரில் அவர் எனக்கு அளித்த அனுமதி கடிதத்துடன் இந்த வழக்கில் சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். சாட்சிய அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிய அழைப்பாணையில் கூறியுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகலை கொண்டு வந்துள்ளேன்.

1) விருதுநகர் இணை சார்பதிவாளர் எண்.2 சாட்சியமளிக்க எனக்கு அளித்த அனுமதி கடிதம் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) எனது அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 20.11.2009 ம் தேதியில் இறந்துபோன செல்லம்மாள் என்பவரின் இறப்பு அறிக்கை உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 21.04.2012 ம் தேதியில் இறந்துபோன குருசாமி என்பவரின் இறப்பு அறிக்கை உண்மை நகல் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 16.03.2026 ம் தேதிய பட்டம்புதூர் கிராமத்தில் 2009 மற்றும் 2012 ம் ஆண்டிற்கான இறப்பு பதிவேடுகள் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தின் உதவியாளர் பாபு என்பவர் மூலம் விருதுநகர் இணை சார்பதிவாளர் எண்.2 பதிவுத்துறை அலுவலகத்திலிருந்து வருவாய் வட்டாட்சியருக்கு பதிவேடுகள் கொடுக்கப்பட்டதற்கான கடிதம் உண்மை நகல் சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 17.03.2026 ம் தேதிய பட்டம்புதூர் கிராமத்தில் 2009 மற்றும் 2012 ம் ஆண்டிற்கான இறப்பு பதிவேடுகள் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தின் உதவியாளர் பாபு என்பவர் மூலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து விருதுநகர் இணை சார்பதிவாளர் எண்.2 அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டதற்கான கடிதம் உண்மை நகல் சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.07.20 15:53:49 +0530